**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை**

**அசல் வழக்கு எண்.18/2022**

DW1 – திரு.நாகேந்திரன் (கிராம நிர்வாக அலுவலர்) நாள். 18.03.2024

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.S.துரைமுருகன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**குறுக்கு விசாரணை**

1. வழக்கு பற்றிய விவரங்கள் எனக்க தெரியுமா என்றால் ஓரளவுக்கு தெரியும். யாருடைய வாரிசு என எழும்புகை செய்ய இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் மலையாண்டி மகன் ஆறுமுகம் மற்றும் கமலா. மேற்படி கமலாவிற்கு முன்பே ஆறுமுகம் இறந்து விட்டார் என்றால் சரிதான். இறந்த ஆறுமுகத்திற்கு கமலா மற்றும் சினேகா ஆகியோர்கள் வாரிசு என வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதா என்றால் வழஙகப்பட்டுள்ளது .**(மேற்படி ஆவணம் வா.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்பட்டது).** மேற்படி கமலா இறந்த பிறகு அவரது வளர்ப்பு மகள் என சினேகாவை வாரிசாக காட்டி சான்றிதழ் வழங்க மறுத்துள்ளோம் என்றால் சரிதான். சினேகாவின் தகப்பனாரின் வாரிசு சான்றிதழில் சினேகாவை வாரிசாக காண்பித்து விட்டு தற்போது அவரது தாயார் இறந்த உடன் அவருக்கு வாரிசாக காண்பிக்க முடியாது என மறுப்பது சட்டப்படி தவறு என்றால் சரியல்ல.

(ஒம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை